தொகுதி-௫௫ Vol. 55

பகுதி-௫ No. 5

செந்தமிழ்

திருவள்ளுவர்

ஆண்டு 1990

விகாரி-ஆவணி

August-1959

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

உ

உள்ளுறை

1. சிலம்பின் சிறப்பு 125
திரு. மது. ச. விமலானந்தம் M. A.

2. காலமும் கவிஞனும் 132
திரு. ச. அகத்திலிங்கம் M. A., B. Sc.,

3. வடலூர் வழி 137
பண்டித திரு. மு. இராமலிங்கம் B. A.

4. நாடகத் தமிழ்ச் சொற்கள் 145
திரு. ப. சுந்தரேசன்

5. அன்பர் அஞ்சல் 152

6. சங்கச் செய்திகள் (படங்கள்) 156

"செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர். தமிழவேள். திரு. பி. டி. இராசன். B. A, (Bar-at-Law) M. L C.
2. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, தியாகராசர் கல்லூரி, மதுரை.
3. டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனுர் M. A. L. T. M. O. L. Ph. D, சென்னை.
4. திரு. பேராசிரியர், பி. சேதுமுத்து. M. A. B, D.
5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர், மதுரை.
6. திரு. வி. சண்முகசுந்தரம் M. A B. L. செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர், மதுரை.
7. திரு. கி. பழநியப்பன், தலைவர். மதுரைத் திருவள்ளுவர் கழகம்–மதுரை.
8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர், தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

3582

உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி ருரு Vol. 55	திருவள்ளுவர் ஆண்டு 1990 விகாரி—ஆவணி 1959—August	பகுதி. ரு No. 5.

"சிலம்பின் சிறப்பு"

(மது. ச. விமலானந்தம், எம். ஏ.,)

(தமிழ் விரிவுரையாளர், சரபோஜி அரசர் கல்லூரி, தஞ்சை.)

சென்ற இதழ் 116-ஆம் பக்கத் தொடர்ச்சி.

11. மணியாரம் படைத்த தமிழ் நாடு:

சிலம்பின் ஒவ்வொரு காதையும் ஒரு மணிபோன்று தனித்தும் சேர்ந்தும் இன்பம் பயக்கும் பெற்றியது. பெரும் பாலும் காதைகள் 'என்', 'என்' எனத் தனிச் செய்யுட்கள் போன்று முடிதலே போதிய சான்றுகும். இங்ஙனம் மணிகள் பல சேர்த்துத் தொடுக்கப் பெற்ற மணியாரமே சிலப்பதிகாரம். சேர்ந்திருந்து செந்தமிழின்பம் பயக்குமாப் போன்றே ஒவ்வொரு காதையும் தனித்து நின்று தலையாய இன்பமும் கதை நலமும் நல்கி நலம் பயக்கக் காண்கின்றோம். இதனாலன்றோ பாரதியும் 'சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ் நாடு' எனப் பாடி மகிழ்ந்தார்!

12. நல்லிசைப் புலவோர் கண்ட நாடும் நகரும்:

நல்லிசைப் புலவோர் கண்ட நாடு நகரங்களுக்கு உயிர் நிலையாக விளங்குவது சிலப்பதிகாரம். கவிகள் தாங்கள் கண்ட கனவு நாட்டை - கற்பனை உலகைத் தாங்கள் தீட்டிய

தெள்ளமுதப் பாடல்களிடையே பெய்து சென்றனர். தங்கும் புகழுடைச் சங்கப் புலவோர் தம் பாடல்களி னூடே தம் கருத்தை அங்கொன்றும் இங்கொன்றுமாகக் குறித்துச் சென்றனர். இளங்கோவோ, 'நாடு காண் காதை', 'காடு காண் காதை', 'ஊர் காண் காதை' என்ற அளவில் தாம் கண்ட நிறையுடை உலகத்தைக் காப்பியத் திடையே அமைத்துச் சென்றார். பின்னர் வந்த சேக்கி ழாரும், திருத்தக்க தேவரும், பம்பு புகழ்க் கம்பரும் 'நாட் டுப் படலம்', 'நகரப் படலம்' என வரைந்து செல்வராயி னர். அம்முறையில் கவிகள் கண்ட கற்பனை நாட்டிற்குத் தங்கம் நிகர் சங்கப் பாடல்கள் **ஊற்றுநிலை** யென்றால்—, பின்னர் வந்த பெருங்காப்பியங்கள் **உச்சநிலை** யென்றால், **உயிர்நிலையாக** அமைவது சிலப்பதிகாரம் எனில் மிகை யாகாது.

13. சிலம்பில் இயற்கை:

மேலை நாட்டு இலக்கியங்கள் இயற்கையை விதந்தோது வது போன்று அழகுதமிழ்ப் பனுவல்கள் அவ்வளவாக அதனைப் பற்றிப் பேசவில்லையே என்று குறை கூறுவர். அவர்கட்கு இளங்கோவடிகள் எடுத்தாளும் இயற்கைப் புனைவே போதிய காட்டாகவும், போற்றத்தக்க சான்றாகவும் அமையும். 'இளங்கோவே தமிழ் இலக்கிய வோர்ட்ஸ் வொர்த்' (Wordsworth of Tamil Literature) எனத் திறம்படக் கூறுமளவிற்குத் தமிழ் இலக்கியத்தில் அமைந்த இயற்கை எழில் பேசும் நூல் சிலப்பதிகாரம். இச்சிறப்பு சிலம்பிற்கே அமைந்த தனிச்சிறப்பே யன்றோ?

14. தமிழ் உரைநடை:

அடுத்து, தமிழ் உரைநடையின் தொடக்க நிலையினை அறிய உதவும் **முதல்** நூலும் இஃதொன்றே! பண்டைத் தமிழ் உரை நடையின் போக்கையும் பெற்றியையும் அறிய உதவுமாற்றான் தக்க கருவியாக—முதற் சான்றாக (Pionee

of Tamil Prose Litt.) அமைவது சிலம்பே எனும்போது சிந்தை மகிழ்கின்றோம்.

15. சிலம்பில் இசை:

தமிழிசையின் தொன்மையையும், இசைத்தமிழின் ஏற்றத்தையும் இலக்கணத்தையும் அறிய நமக்குக் கிடைத்திருக்கும் **முதல்** தமிழ் நூல் - இசைத் தமிழ் இடையிடையே விரவிய தெள்ளரிய தமிழமுதும் தெவிட்டாத கவியமுதுமாய நூல் இச்சிலப்பதிகாரமே. வரிப்பாட்டாக அமையும் 'ஆற்றுவரி', 'ஊசல்வரி', 'கந்துகவரி', 'கானல் வரி', 'வேட்டுவரி' போன்ற வரிப்பாடல்களும், 'அரங்கேற்றுக் காதைப்' பகுதிகளும்; உரையினின்றும் தெரியவரும் 'பெருநாரை', 'பெருங்குருகு', 'பஞ்சபாரதீயம்', 'இசை நுணுக்கம்' பற்றியும் அறிகின்றோம். எனவே தமிழிசை வரலாற்று ஆராய்ச்சிக்கு அமையும் முதல் நூல் சிலப்பதிகாரம். இசை நோக்கிலும் இச்சிலம்பே ஏற்றமும் இடமும் பெறும் சிறப்புடைத்தென்க.

16. சிலம்பில் நாடகம்:

இது போன்றே நாடகம், கூத்து ஆகியவற்றிற்கும் ஆதாரமாக அமையும் **முதல்** நூலும் சிலம்பே எனலாம். நாடகத் தமிழுக்குரிய கட்டுரை, உரைப்பாட்டு, 'ஆய்ச்சியர் குரவை', 'குன்றக்குரவை' 'அரங்கேற்றுக் காதை'யின் பெரும் பகுதி, 'வாழ்த்து வரந்தருகாதைப்' பகுதிகளும் அரங்கின் அமைதியையும், ஆடல் சிறப்பினையும், நாடகப் போக்கினையும் நன்கு புலப்படுத்துகின்றன. உரையின் வாயிலாகவும் 'இந்திர காளியம்', 'பஞ்சமரபு', 'பரத சேனுபதீயம்', 'மதிவாணர் நாடகத் தமிழ்' போன்ற நாடக இலக்கண நூல்களைப் பற்றியும் அறிய வருகின்றோம். இங்ஙனம் நாடகத் தமிழின் தொன்மை நோக்கும் முறையிலும் தக்க ஆதாரமாக அமையும் இச்சிலம்பின் சிறப்பை என்னென்பது?

17. நாடகக் காப்பியம்:

காப்பியத்திற்குக் காப்பியமாகவும், நாடகத்திற்கு நாடக மாகவும் ஒருங்கு அமையும் சிறப்பு-வேறு எந்த இலக்கியத் திலும் இல்லாத தனிச்சிறப்பு-சிலப்பதிகாரத்திற்கு உளது. நாடகப் போக்கும் காப்பிய அமைதியும் ஒருங்கே பெற்ற இச்சிலம்பை 'நாடகக் காப்பியம்' (Dramatic Epic) என்றே அழைக்கலாயினர். ஆங்கிலக் கவி 'மில்டன்' செய்த "இழந்த இன்பவீட்"டில் சாத்தானுக்கும் காப்ரியேலுக்கும் இடையே நிகழ்ந்த – நாடகப்போக்கில் அமைந்த சொற்போர்ப் பகுதியைக் (Altercation between Satan and Gabriel in Milton's Paradise Lost-Book IV) கண்ணுற்ற 'மெக்காலே' என்பார், 'ஒரு வேளை மில்டன் இழந்த இன்பவீட்டை-சுவர்க்க நீக்கத்தை முழுதும் நாடகமாகவே இயற்ற எண்ணினரோ என எண்ணவேண்டியுளது' என்று கூறியுள்ளார். அதுபோன்றே சிலப்பதிகாரத்தின் இறுதியில் அமைந்த 'வாழ்த்து-வரந்தரு காதை'களைப் படிப்போர்க்கு, இளங்கோ வடிகளும் தமது காப்பியத்தை நாடகமாகவே இயற்ற எண்ணினரோ என எண்ணத் தோன்றும்; அங்ஙனம் அழகுபட அமைந்துள்ளன அப்பகுதிகள். அன்றியும் 'வழக்குரை காதை'யுள் வரும் உரையாடல்களும், சிலப்பதி காரப் பெரும் பாத்திரங்களின் வாழ்வில் நிகழ்ந்தவற்றை வரலாற்று ஆசிரியன் போன்று - கதை கூறுமாப்போல - நிரல்பட அப்படியே வரிசையாகக் கூறிவிடாது இடத்திற் கும் பாத்திரங்கட்கும் ஏற்ப மாற்றியமைத்துள்ளமையும் சிலம்பைச் சிறந்த நாடக நூலாகச் செய்துள்ளன. இங் ஙனம் இரண்டின் அமைதியும் ஒருங்கே பெற்ற சிலம்பின் சிறப்பே சிறப்பு.

18. ஒருமைக் காப்பியம்:

சிலப்பதிகாரம் சிந்தைக்கும் செவிக்கும் விருந்தாக அமைவதோடன்றி, உள்ள உணர்விற்கோர் ஒளிநெறி காட் டும் காப்பியமுமாகும். 'ஒருமை காணும் உள்ளத்தைப்'

படிப்போர்பால் தோன்றச் செய்யும் திறமுடைத்து. தமிழால் தமிழகம் ஒன்றுபட்டு ஒளிரவேண்டும் என்ற உணர்வைச் சிலம்பை ஒருமுறை ஓதியோரும் பெறுவர்; இதனை இளங்கோவடிகள் புகார், மதுரை, வஞ்சிக்காண்டம் எனப் பெயர் நல்கி, மூவேந்தரையும் பலவிடங்களிலும் ஒப்ப - ஒருங்கு புகழ்ந்து - பிளவுபட்ட மூவேந்தர் நாட்டை மும்மைத் தமிழகமாக முழங்கச் செய்தமைகொண்டே உணரலாம். அரசியலோடன்றி, சமயத் துறையிலும் ஒருமை மனப்பான்மை-ஒற்றுமை உள்ளம் ஓங்கவேண்டும்-ஒளிர வேண்டும் என்ற உறுதிப்பாட்டையுடைய நந்தமிழ்ச் சிலம்பு உண்மையிலேயே ஓர் ஒற்றுமை உணர்த்தும் ஒருமைக் காப்பியமாகும்.

19. நாட்டுக் காப்பியம்:

முத்தமிழின் நீர்மையை முழங்குவது போன்றே, மூவேந்தர் சீர்மையையும் சிறப்பையும் செப்புகின்றது சிலப்பதிகாரம்: சோழனையும் சோணாட்டின் செழுமையையும் 'புகார்க் காண்டத்தாலும், பாண்டி மன்னனையும் பாண்டி நாட்டின் பெருமையையும் 'மதுரைக் காண்டத்'தாலும்; சேரனையும் சேர நாட்டின் சிறப்பையும் 'வஞ்சிக் காண்டத்'தாலும் ஏற்றிப் போற்றியுள்ளார் இளங்கோ. சோணாட்டில் பிறந்து வளர்ந்து, பாண்டி நாட்டில் பரந்து வாழ்ந்து, சேர நாட்டில் சிறந்து திகழ்ந்த தென்தமிழ்ப் பாவை முப்பெரும் நாட்டையும் தன் இன்னல்மிகு வாழ்வால் இணைத்து நின்றுள், இங்ஙனம் சோழ, பாண்டிய, சேர நாடுகளைப் பின்னிப் பிணைத்த 'சிலம்பின் கதை'யை, தம் கவிதைத் திறத்தாலும் கற்பனை சக்தியாலும் என்றுமுள தென்தமிழால் இறவாத பெருங் காவியமாக யாத்த இளங்கோவின் திறம் வியந்து செயல் மறந்து பாராட்டற்பாலது. எனவே வீட்டுச் சிலம்பு விளைத்த நாட்டுச்சிலம்பை நாட்டுக் காப்பியம்-தேசிய திருக்காப்பியம் (National Epic) எனவும் அழைக்கலாமன்றோ?

20. பெண்மை யுணர்த்தும் பெருங்காப்பியம் :

தமிழ் மகளிருள் தலையாயவளாகப் புகார்க் காண்டத்தில் ஒளிர்ந்து, அடுத்து மதுரைக் காண்டத்திலே மனித நிலையைக் கடந்த மாண்புடையளாக விளங்கி, வஞ்சிக் காண்டத்தில் விண்ணவர் ஏத்த, மன்னவர் வியந்து போற்ற, பத்தினித் தெய்வமாகக் காட்சி தந்த கற்பின் செல்வி கண்ணகியின் கதையை — வரந்தரும் வீராங்கனையின் வீர வரலாற்றை விலக்குவதே சிலப்பதிகாரம். இங்ஙனம் 'பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்' என்ற உணர்வை ஊட்டி, பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என ஏற்றிப் போற்றுமாற்றான் பெண்ணின் பெருமையை முதன்முதல் உணர்த்திய உலகிற்கோங்கிய ஒரு மாமணி — தமிழுக்கோங்கிய திருமா மாமணி சிலப்பதிகாரமே! இதுவும் சிலம்பு பெறும் சிறப்பே என்க.

21. எச்சரிக்கைக் காப்பியம்:

நாட்டு மக்களிடையே நிலவும் நல்லுறவைக் கெடுப்பன —நல்லுறவு தழைக்காது தடுப்பன இரண்டு: ஒன்று அரசியல் பிளவு; மற்றொன்று சமயப்பூசல், நல்லுணர்வு ஏற்பட நிலைக்களனாக அமைவது அன்பு; ஆனால் அவ்வுறவைக் குலைக்கும் அரசியல், சமயம் போன்றவற்றிற்கு வித்து அறிவு. முன்னதற்கு இதயமும், பின்னதற்கு மூளையும் அடிப்படையாகும், அறிவு வளர்ச்சி சமுதாய முன்னேற்றத்திற்கும், நாட்டு நலத்திற்கும் வழிகோலுவதானாலும், அறிவு வளர்ச்சி மட்டும் போதாது. ஆன்ம வளர்ச்சியும் வேண்டும். அறிவு வளர்ச்சியால் ஏற்படும் பிளவுகளை நீக்கி ஒருமையை உண்டுபண்ணுவது அன்பு. எனவே, 'அறிவுக்குத்துணை அன்பு' என்க. இதனையே 'அறிவால் வித்தகனாகி மனதால் உத்தமனாக' என்றார் அருணகிரியார். எள்ளறு புலமை வள்ளுவர் கூட 'அரம்போலும் கூர்மையரேனும் மரம்போல்வர் மக்கட் பண்பில்லாதவர்' என்று கூறுவது தெளிக.

இதுகாறும் அரசியல், சமயம் போன்ற அறிவு வளர்ச்சியில் ஈடுபடலாம் - அவ்வளர்ச்சி நாட்டு முன்னேற்றத்திற்கு நிலைக்களனுகும்; ஆனுல் அதே சமயத்தில் அன்பு உணர்ச்சியும் வேண்டும். அஃதாவது அறிவு வேறுபாடும் மன ஒருமைப்பாடும் வேண்டும். அரசியல், சமயம் போன்ற அறிவு வளர்ச்சியில் வேறுபாடும் மாறுபாடும் இருப்பினும் மன ஒருமைப்பாடு—நாம் அனைவரும் தமிழினத்தவர் என்ற ஒற்றுமை—உறுதியுள்ளம் வேண்டும். இதனையே செங்குட்டுவன், மாதரி போன்ருரைக் கொண்டு காப்பிய வாயிலாகக் காட்டுகின்ருர் இளங்கோ!

பிளவுபட்ட மூன்று நாடும் மும்மைத் தமிழகமாக ஒன்றுபட வேண்டும். இடத்தாலும், அரசாலும், சமய வேறுபாட்டாலும் மாறுபடினும்; தமிழ், தமிழினம், தமிழ் நாடு என்ற நினைவால் ஒன்றுபட்டு ஒளிரவேண்டும். ஒன்றுபடா்விடில் அனைவர்க்கும் தாழ்வே என்று எச்சரிக்கை விடுப்பது சிலம்பு. (சமயத்தாலும் அரசாலும் வேறுபாடு கொள்ளினும் தத்தம் சமயத்தில்—அரசில் பற்றும் உரிமையும் கொண்டு, ஏனைச் சமயத்தவர்பால் — அரசியலார்பால் உறவும் பரிவும் கொண்டால் (அறிவால் வேறுபட்டு மனத்தால் ஒருமைப்பட்டால்) உண்டு வாழ்வு! இன்றேல் தாழ்வே!! என்று எச்சரிப்பதும் சிலம்பே!

சிலம்பின் காலத்தே போன்று கலைக்கும் குடும்பவாழ்விற்கும் தொடர்பின்றி, கலை குறிப்பிட்ட குடும்பத்தினருக்கே — விலைமகளிர்க்கே உரியது — குலமகளிர்க்குத் தொடர்புடையதன்று என்ற தவருன எண்ணம் மாறுவதை மதுரைமட்டுமல்ல, மண்டிலமே எரிந்தவண்ணமிருக்கும்; கண்ணகியர் பலர் தோன்றியவண்ணமிருப்பர். பண்டு போல் கலையில் வாழ்வையும், வாழ்வில் கலைமணமும் கமழ விழையவேண்டும். இன்றேல் என்றும் இழவும் இழப்புமே என்று எச்சரிக்கின்ருர் இளங்கோ தம் காப்பிய வாயிலாக.

(தொடரும்)

காலமும் கவிஞனும்

(ச. அகத்தியலிங்கம் M. A., B. Sc.)
இந்துக்கல்லூரி, நாகர்கோவில்.

"காலம் என்பது கறங்குபோல் சுழன்று
மேலது கீழாய்க் கீழது மேலாய்
மாறிடும் தோற்றம்" — என்று பாடினார் மனோன்மணியம் ஆசிரியர் சுந்தரனார். ஆம். காலத்தின் மாறுதல்களை நம்மால் கணக்கிடமுடியாது. தனி மனிதனின் வாழ்விலும் ஒரு நாட்டின் வரலாற்றிலும் எத்தனை மாற்றங்களைக் காண்கிறோம். தமிழ் நாட்டின் வரலாற்றின்கண் முடியுடை மூவேந்தர்களின் காலம், பல்லவ களப்பிரர் காலம், பிற்காலச் சோழ பாண்டியர்களின் காலம், நாயக்கர் காலம், ஆங்கிலேயர்களின் காலம் என்று பல்வேறு காலங்களைக் காண முடிகிறதன்றோ? இதே போன்று ஒரு மொழியின் இலக்கிய வளர்ச்சியிலும் பல் வேறு காலங்களைக் காணமுடியும். எல்லாக் காலங்களிலும் சிறந்த இலக்கியங்கள் தோன்றுவதில்லை.

இலக்கியம் என்பது தனி மனிதனின் படைப்பாயினும் அதனை ஆக்கி அளிக்கின்ற ஆசிரியன் சமூகத்தின் ஒரு அங்கம் என்பதை நாம் மறந்துவிடுதல் ஆகாது. இலக்கிய ஆசிரியன் அல்லது கவிஞன் சமூகத்தின் பிடியினின்றும் விலகி வாழ விரும்பினாலும், சமூகத்தின் நிலை, அதன் ஏற்றத் தாழ்வுகள் அவனுடைய உள்ளத்தில் ஊடுருவாமல் இருப்பதில்லை. ஊடுருவிய அந்த ஏற்றத் தாழ்வுகளின் சாயல்கள் அவன் அறிந்தோ அறியாமலோ அவன் ஆக்குகின்ற இலக்கியங்களில் படிந்து விடுகின்றன-

" நெல்லும் உயிரன்றே நீரு முயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்"

என்று பாடிய புறநானூற்றுப் புலவன்முதல் நிலைகெட்ட மனித சமுதாயத்தைக் கண்டு,

"நெஞ்சு பொறுக்கு தில்லையே இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்..."

என்று குமுறிக் குரல் கொடுத்த இருபதாவது நூற்றாண்டுப் புலவன் ஈறாகவுள்ள அத்தனைப் புலவர்களின் கவிதைகளும் 'காலக் கண்ணாடி'யாகத் தானே விளங்குகின்றன?

காலச் சூழல்கள் கவிஞனின் கவிதைகளில் ஊடுருவி நிற்பதோடு மட்டுமன்றிக் கவிஞர்களையே உருவாக்கு கின்றன என்று அறிஞர்கள் கருதுகின்றனர். எல்லா மொழிகளிலும் உள்ள சிறந்த இலக்கியங்களும் கவிதை களும் தோன்றிய காலங்களை நன்கு ஆராய்ந்து பார்த்தால் இந்த உண்மை நன்கு புலனாகும். எனவேதான் இலக்கியங் களைச் சமுதாயப் படையல்கள் (Social Products) என்று கூறுகின்றனர் அறிஞர் பெருமக்கள். சிறந்த இலக்கியங் கள் அல்லது கவிதைகள் தோன்ற இரண்டு சக்திகள் இணைந்தாக வேண்டும். ஒன்று கவிஞனின் கவித்துவம்; இன்னொன்று காலம். இவ்விரண்டு சக்திகளும் ஒன்றாக இணையும்போதுதான் அமர இலக்கியங்கள் உருவாகின்றன. ஆனால் இவ்விரண்டு சக்திகளும் இணைவது மிக அரிதாகும்; இதனால் தான் ஒவ்வொரு மொழியிலும் அமர இலக்கியங் கள் அருகிக் காணப்படுகின்றன.

ஆங்கில நாட்டு இலக்கிய வரலாற்றில் பதினாறாவது நூற்றாண்டின் இறுதிப் பகுதி மிகச் சிறப்பாகக் கருதப்படு கிறது. கல்வி, தேசியம், சமயம் போன்ற பல துறைகளில் எழுச்சியும் புத்துணர்ச்சியும் தோன்றிய காலம். (ஸ்)காட் லந்து அரசிக்கும் எலிசபெத் அரசிக்கும் இடையே நடந்த போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்றது. இங்கிலாந் திற்கு எதிராக நடந்த (ஸ்)பெயினின் முயற்சிகள் யாவும் தோல்வியுற்றன. இங்கிலாந்து மக்கள் அனைவரும் அவர்

களுடைய சக்தியில் நம்பிக்கை கொண்டு பல்வேறு துறை களில் முயன்று முன்னேறினர். ஐரோப்பிய நாடுகளி னிடையே அதன் செல்வாக்கு பரவிய நேரம். இத்தகைய சிறந்த தேசியச் சூழ்நிலைதான் மார்லோ, ஷேக்ஸ்பியர், பென்சாண்சன் போன்ற சிறந்த நாடக ஆசிரியர்களையும் இலக்கிய மேதைகளையும் ஈன்றெடுத்தது.

இத்தகைய நிலையினைத் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் காணலாம். சங்ககாலத் தமிழகம் பல்லாற்ருனும் சிறப் புற்று விளங்கியது. மக்கள் வாழ்வில் நல்வளம் பெற்று வாழ்ந்தனர். சேர சோழ பாண்டியர்களின் ஆட்சியால் நாடு நலம் பல பெற்றுத் திகழ்ந்தது. மக்களிடையே ஒரு எழுச்சி இருந்தது. இத்தகைய சூழ்நிலையில்தான் சிறந்த புலவர்கள் பலர் தோன்றினர். சங்க கால இலக்கியங்கள் முகிழ்த்தன. சாகாவரம் பெற்று இரண்டாயிரம் ஆண்டு கட்குப் பின்னரும் நம் இதயங்களினின்றும் நீங்காது நின்று நிலவுகின்றன.

ஆனுல் சேர சோழ பாண்டியர்களின் வீழ்ச்சிக்குப் பின்னுல் தமிழகத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. தமி ழகம் என்றும் கண்டறியாத துன்ப நிலையை யடைந்தது. சீரும் சிறப்பும் இழந்தன. மக்கள் எழுச்சியின்றி அடங்கிக் கிடந்தனர். களப்பிரரும் பல்லவர்களும் தமிழ் நாட்டில் வேரூன்றினர். தேசீய உணர்வு அற்றுச் சாம்பிக்கிடந்தது தமிழகம். இந்த நிலையில் கவிஞர்கள் தோன்ருமல் இல்லை. பதினெண் கீழ்க்கணக்கு நூற்களில் பல தோன்றிய காலம் இதுவாகும். இந்நூற்களில் சிறந்த உவமைகள், கருத்துக் கள், மனித வாழ்வுக்குரிய அறங்கள் முதலியன பேசப்படு கின்றன. பாடிய கவிஞர்களில் பலர் சிறந்த நுண்ணறிவு படைத்தவர்கள். ஆயினும் காலச்சூழல் சிறப்பாக அமை யாத காரணத்தால் அந்த நூற்களின் அமரத்துவ சக்தி குறைந்துவிட்டது.

மீண்டும் தமிழகத்தில் பிற்காலச் சோழர் களின் ஆட்சிக் காலத்தில் எழுச்சி தோன்றியது. தமிழ்ப்

புலவர்கள் நன்கு ஆதரிக்கப்பட்டனர். தென்னகம் மட்டு மன்றி வடநாட்டிலும் சோழர்களின் ஆட்சி பரந்தது. தமிழ் மன்னர்கள் கடல் கடந்து வெற்றியும் பெற்றனர். இவர் களின் பகைவர்களாகிய இராட்டிரகூடர்கள், சாளுக்கியர் கள் ஆகியோரின் முயற்சி வெற்றி பெறவில்லை. தமிழ் மக்களிடையே ஒரு புது உணர்ச்சி பெருக்கெடுத்தோடியது. 'நாம் சிறந்தவர்கள்' என்ற எண்ணம் அவர்கள் நாடிகளி லும் நரம்புகளிலும் பாய்ந்து வளர்ந்தது. நாட்டிலே ஒரு புது மலர்ச்சி; மக்களின் உள்ளங்களில் எக்களிப்பு.

இங்கிலாந்தில் பதினாறுவது நூற்றாண்டில் காணுகின்ற அதே நிலையைத் தமிழகத்துப் பிற்காலச் சோழர்களின் ஆட்சியில் நம்மால் காணமுடியும்.கவிஞர்கள் தங்கள் திறமை யினை நன்றாகப் பயன்படுத்தினர். இக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள்தாம் சிந்தாமணி, கம்பராமாயணம், பெரிய புராணம் போன்ற அமர காப்பியங்கள். பதினாறுவது நூற்றாண்டு இங்கிலாந்து ஒரு ஷேக்ஸ்பியரை ஈன்றெடுத் தது என்றால் தமிழகத்தின் பிற்காலச் சோழர்கள் ஆட்சி மகாகவி கம்பனை ஈன்றெடுத்தது. காலமும்கவிஞனும் இணையும்போதுதான் சிறந்த இலக்கியங்கள் தோன்று கின்றன.

தமிழ் இலக்கிய வரலாற்றில் மீண்டும் ஒரு தேக்க நிலையைக் காண்கிறோம். தமிழ் நாட்டில் கொய்சாளர்கள் விசய நகரப்பேரரசின் பிரதிநிதிகள், முகமதியர்கள், இவர் களுடைய நுழைவும் வெற்றியும், பாண்டியமன்னர்களின் குடும்பப் போரும் சோழர்களின் வீழ்ச்சியும் கம்பன் கவி பாடிய சூழ் நிலையைக் கெடுத்து விட்டன. பதினாறு பதினேழு பதினெட்டாம் நூற்றாண்டுகளில் சில சிறந்த புலவர்கள் தோன்றினர். எத்தனையோ நூற்களைப்பாடியும் உள்ளனர். 'இம்' என்னு முன் எத்தனையோ பாடல்களைப் பாடிக்குவிக்கும் ஆற்றல் பெற்ற புலவர் பெருமக்களும்

வாழ்ந்தனர். கவிதைபாடுவதில் புதுப்புது நெறிகளையும் வகைகளையும் கையாண்டனர். ஆனால் அவையனைத்தும் இருபதாம் நூற்றாண்டில் வாழுகின்ற நம்முடைய உள்ளங் களிலேயே நில்லாதனவாய்க் காணப்படுகின்றன. காரணம் அவர்களின் புலமையிற் குறைபாடின்று. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் புலமையையறியாதார் யாரே? ஆனால் இக்காலம் சிறந்த காலம் அன்று. தமிழ் மக்கள் எல்லாத்துறைகளிலும் நலிவுற்றுக் கிடந்த காலம். இந்நேரத் தில் கவிஞர்களின் உள்ளம் கவித்துவ நிலையில் அமைவ தில்லை. உள்ளத்து உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பி அவற்றிற்கு உருக்கொடுக்கும் நிலைமையில் கவிஞர்களை ஆக்க வில்லை இக்காலம். கவிஞனோடு காலம் கைகோத்து நிற்காத காரணத்தாலேயே அவனால் சிறந்த இலக்கியங் களைத்தரமுடியாது போயிற்று.

கம்பனுக்குப் பின்னால் பாரதியைக் காண்கிறோம். கம் பன் வாழ்ந்த காலத்துக்கும் பாரதி வாழ்ந்த காலத்துக்கும் அடிப்படையிலே வேற்றுமை இருப்பதாகத் தோன்றலாம். கம்பன் காலம் தமிழ் அரசும் தமிழகமும் ஓதுங்கி நின்ற நேரம். பாரதியின் காலமோ அடிமைத்தளையில் நின்று தத்தளித்த அவலநிலை: ஆனால் கம்பனின் காலத்தில் தேங்கிக்கிடந்த தேசியப் பெருமை பாரதியின் காலத்தில் குமுறிக் குரல் கொடுத்தது. தன் பெருமையை, பழமையை எண்ணி அதை மீண்டும் அடைய எழுச்சிபெற்றது. நாட் டுக்குமுறலின் மீதும் கொந்தளிப்பின்மீதும் தோன்றிய எழுச்சிதான் பாரதியை அமரனாக்கியது. எனவே இரு கவிஞர்களின் காலத்திலும் எழுச்சியை நம்மால் காணமுடி கிறதன்றோ?

எனவே இதுகாறும் கூறியவற்றால் சிறந்த காவியம் அல்லது கவிதை தோன்ற இரண்டு சக்திகள் இன்றியமை யாதன என்பது நன்கு விளங்கும். ஒன்று கவிஞனின் சக்தி. மற்றது காலத்தின் சக்தி· ஒன்று இருந்து மற்றது இல்லையேல் சிறந்த இலக்கியங்கள் தோன்றா. கவிஞனும் காலமும் இணையும்போதுதான் சிறந்த இலக்கியங்கள் தோன்றுகின்றன. இல்லையேல் தோன்றா.

வடலூர் வழி

உடனூல் ஒளி

(பண்டித மு. இராமலிங்கம் B. A.,)

"கவலை துறந்து இங்கு வாழ்வதே வீடு என்று காட்டும் மறைகளெல்லாம்" என்பர் கவிஞர்; வடலூர்வழி வந்த பாவலர். எளிய நடையில் எழுத வழிகாட்டியவர் வடலூர் ஆண்டவர்; பாட உணர்வூட்டியவர் வடலூர் ஆண்டவர். எனவே, அவர் வழி பற்றியே கவிஞர் 'களக்க மறப்பொது நடங்கண்டு' பாடினர்; "மார்லி நடம்" கண்டும் பாடினர்: அவர் மூவாமையும் சாவாமையும் பற்றியும் முழங்கினர். மேலும்,' 'உறக்கமும் சாவுமே நண்ணுருவணம் நன்குபுரந் திடும்...பண் அமிழ்தத்து அருள்மழை" பற்றியும் பாடினர்.

மறைகள் எல்லாம் காட்டுகின்ற நெறி ஒன்றே. அது யாது? "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் நன்றே நினைமின் நமனில்லை" என்பதே அந்நெறியாகும். அதுவே அருள் நெறி; அதுவே ஒளிநெறி. அந்நெறியில் ஒளியுடம்புபெற்ற பெருந்தகையே நம் வடலூர் ஆண்டவர்.

கவலை துறப்பது எப்படி? இதுவே இன்றைய உலகை வாட்டிவரும் பெரும் கேள்வி. இதற்கு விடை காண முயல்வதே பேரறிஞர் அனைவரும் விரும்பும் ஒளி நெறியாகும்.

'செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம் சேர்ந்திடலாம்' என்பது பித்த மனிதர் பிதற்றலே. இத்தரையில் இப்பிறவியிலேயே கவலை துறந்து வாழ்வதாகிய வீடு பேறு எப்படிக் கிட்டும்? என்பதே அப்பெருங் கேள்வியின் முழு வடிவமாகும். "அறிவுவடி" வென்பர் திருமூலர்.

கவலை ஏன் உண்டாகிறது? அது எப்படி நம்மை அண்டி நின்று ஆட்டுகின்றது? அதன் வரலாற்றை உணர நேர்ந்தால் அதனை அண்டவிடாமல் அடித்து விரட்டிவிட லாமன்றோ?

ஆம். உண்மைதான்! திரும்பிப் பார்க்கலாம்; எட்டிப் பார்க்கலாம்; உற்றுப் பார்க்கலாம்: கண்ணினும் செவியி னும் நுண்ணிதின் உணரலாம்; கவலை தீர்க்கலாம்.

"ஒன்றாகக் காண்பதே காட்சி; புலனைந்தும்
வென்றான்தன் வீரமே வீரமாம்;—என்றாலும்
சாவாமற் கற்பதே கல்வி; தனைப்பிறர்
ஏவாமல் உண்பதே ஊண்" என்ற அவ்வையார் கருத்தையும் வடலூர் ஆண்டவர் கருத்துடன் ஒத்துப்பார்க்க உண்மை விளங்கும்.

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்ப"தொன்றே வீடுபேறு; ஒளியுடம் பெய்தும் ஒரே நெறி; அடிமன நூல் ஆராய்ச்சியும் நம்மை அத்திக்குநோக்கியே நடத்துகிறது. அதனை இனி, துன்ப நீக்கத் தொடர்வோம்.

கவலைக்கு அடிப்படை அச்சம். இதுவே அடிமன ஆராய்ச்சி காட்டும் முடிவாகும்.

திடீரென விழுவது குழந்தைக்கு அச்சம் தருகிறது. அது பிறப்பிலமைந்தது. மரக்கிளைகளில் இரவில் துயின்றனர் பண்டை மாந்தர்; தூக்க நிலையிலே பலமுறை தவறி வீழ்ந்தனர். அதனால் ஏற்பட்ட அச்சம் வழிவழியாக வந்திருக்கிறது.

இடியும் காட்டு விலங்கு முதலியவற்றின் கொடிய ஒலியும் அச்சம் தந்தன. இது அச்சம் என்ற கொச்சை மகப் பிறந்து வளர்ந்தவரலாற்றில் ஒரு பகுதியாம்.

எச்சரிக்கையாக மக்களை வளர்த்தால் அச்சம் ஓரளவு குறைந்து அறிவு பெருகும்.

"அச்சம் உள் அடக்கி அறிவு அகத்து இல்லாக்
கொச்சைமக்களைப் பெறுதலின் அக்குடி
எச்சம் அற்று ஏமாந்து இருக்கையும் நன்றே"

என்று நறுந்தொகை நவில்கின்றது; அருந்தமிழ் வேந்தன் அறைகின்றான்.

அடிமனத் தூண்டலாலும் அச்சம் உண்டாகின்றது; வடிமன வருத்தத்தாலும் அச்சம் பிறக்கின்றது; படி மனம் பழுதுறலாலும் அச்சம் நுழைகின்றது; மனச்சான்று மாறுபடலாலும் அச்சம் இடம் பெறுகின்றது இத்தகைய அச்சங்களை அகற்றியே வீடுபெற வேண்டிய ஒளிநெறியில் ஏறுபோல் பீடுநடை போடவேண்டும்.

அடிமனத்தில் பலவகையான தீய உந்தல்களும் இச்சைகளும் ஒளிந்துகொண்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் விரட்டியடிக்க வேண்டும். ''அறிவு வடிவு.'' எனவே, மன வடிவை ஒரு வகையிலேனும் வரைந்தறிய வேண்டும்.

உளவடிவு

<table>
<tr><td rowspan="3">4 சான்றுளம் (Superego)</td><td>3 நனவுளம் (Wit)</td></tr>
<tr><td>2 கனவுளம் (Ego)</td></tr>
<tr><td>1 துயிலுளம் (Td)</td></tr>
</table>

இவற்றை அடிமனம், வடிமனம், படிமனம், சான்றுமனம் அல்லது துரியம் என்றும் வழங்கலாம். இவ்வழக்கால் பல உண்மைகள்–துண்டுபட்ட உண்மையின் பகுதிகள்-ஒன்றுபட்டு உயர்வழி காட்ட இயலும். ''ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே''

உணவு, புணர்வு, துயில், அச்சம் என்ற இந்நான்கிலும் மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

உணவு $\frac{1}{2}$ துயில் $\frac{1}{8}$

புணர்வு $\frac{1}{16}$ அச்சம் 0 என அமைத்தால் ஒளி நெறி திறக்கும்; சிறப்பு என்னும் செம்பொருள் காணலாம் என்பர் நம் வடலூர் ஆண்டவர்.

"மதியைக்கெடுத்து மரணம் எனும் வழக்கைப் பெருக்கி இடர்ப்படும் ஓர் விதியைக் குறித்த சமயநெறி" செல்லாமல் ஒளி நெறி செல்ல வேண்டும். மரணம் உணவு மிகையாலும், குறையாலும், முறைதவறிய நடையாலும் உண்டாகிறது. கிணற்றை இடைவிடாது இறைத்தால் வற்றி வரண்டுவிடும்; இறையாதிருப்பினும்நீரில் அழுக்கு ஏறி ஊற்றுக்கண் அடைபடும்; கதிரவனுல்காய்ந்துபோம்.

வீடுதிறக்க அருளே திறவுகோல் என்பதையும் நம் ஆண்டவர் வற்புறுத்தி நூல் எழுதியுள்ளார்; சீவகாருண்ய ஒழுக்கமே அந்நூல். அதையும் அருட்பாவையும் கற்று அடிமனஅறிவின் மணிமுடிகாணவேண்டும்.

இப்போது மேற்குறித்த மன வடிவை உற்றுநோக்கி மேற்செல்வோம்.

நினைவிலும் செயலிலும் நேர்மை கடைப்பிடிக்கிறவன் அஞ்சான்; அயரான்; சொல்சோர்வுறுன். இதனைக் குறிக்கவே நம் ஆண்டவர் அச்சம் பூச்சியமாக வேண்டும் என்று குறிப்புரை தந்தருளினர்.

புறப்பொருளச்சம் அகப்பொருளச்சம் மனச்சான்றச்சம் என்ற மூன்றும் அகல வேண்டும். நனவு, கனவு, துயில் என்ற மூன்று நிலைகளும் கட்டி, நீர், (திரவம்) வளி (காற்று) நிலைகளைப்போன்றவை. பொருள் ஒளியாக மாறும்போது இவை மறைந்துவிடும்: இஃது இன்றைய அறிவியல் கண்டமுடிவாகும்.

பொருள் ஒளியாக மாறு முறைபற்றித் தனியே விளக்க லாம். இப்போது அதற்கு உரிய கருவியை மனவடிவை நன்கு துருவி நோக்கியுணர முயல்வோம்.

அடிமன உந்தல்களாலும் அங்கே அடங்கி ஒளிந்திருக் கும் ஆசைகளாலும் தூண்டப்பட்டு தவறு செய்துவிடு வோமோ என்ற அச்சம் ஒருவகை; மனச்சான்றின் உயர் நெறிமுறை தவறியபோது அம்முறைக்கு மாருக நடந்து விட்ட போது அதனுல் வெட்கமும் அச்சமும் உண்டாகின் றன.

புறவச்சத்துடன் இம்மூன்று வகை அச்சங்களையும் தீர்க்க வழியுண்டு. பொய்தீர்ந்தால் அச்சம் தீரும். நேர்மை யாளர் பொய் சொல்ல வேண்டியிராது. அக உலக அச்சம் வெல்லப்படின் புற உலக அச்சம் புக இடமில்லை.

அம்மூன்று வகை அச்சங்களாலும் கவலை பிறக்கிறது; மனப்போர் தொடங்குகிறது; மரணம் தலையெடுக்கிறது. இவற்றை எல்லாம் ஆளவல்லதே ஆண்டகைமை (Persc-nality)யாம். இஃது ஆளின் தன்மைகளை எல்லாம் ஒன்று பட்ட நிலையில் குறிக்கிறது; துண்டுபட்ட நிலையில் அன்று. இத்தன்மைகள் எவை? மனத்தன்மைகள் மட்டுமா? தோற்றமும் பேச்சும் அடங்கும்; தொழில், பண்பு இரண் டுடன் பொருந்தும் எல்லாம் இசைந்து ஒரு முழுத்தன்மை யையே ஆண்டகைமை காட்டுகின்றது. இதை உருவாக்க ஊழ் அணுவும் சூழ் அணுவும் ஒன்றுபட வேண்டும்.

தந்தையை ஒத்தவன் மைந்தன் என வழங்கும் வழக்கு இங்கே நோக்கத்தக்கது. இவ்வொப்புமை எப்படி அமை கின்றது? ஊழணுவாய் (Genes) அமைகின்றது. சூழணுக் களும் (Atom) இதற்குரிய முறையில் துணைபுரிகின்றன. இக் கட்டுக்கோப்பு வரம்புகடந்து சிதைவதையே வள்ளுவர் போகூழ் என்பர். சிறந்தமைவது ஆகூழ்.

ஊழ் என்பது தலைவிதி என்று கவலைப்பட வேண்டாம். வரிசையாகப் பதிந்துள்ள வரலாற்றுமுறைப் பதிவுகளையே ஊழ் என்கிறோம்.

'ஊழுறுதீங் 'கனி' என்பது வரிசையாக அமைந்த வாழைக்கனி முதலியவற்றை நாம் ஊழுற முறைப்பட அமைந்தமை நோக்கிவழங்கும் வழக்காறுதான். ஊழ், பால், முறை, வரிசை, உண்மை என்பன இதையே குறிக்கின்றன.

வெளி உலகம் அடிமனத்துடன் மோதுகிறது; அதன் விளைவே அகம் என்ற வடி மனம். இதிலிருந்தே மனச் சான்றுருவாகிறது. நனவைக் கடந்து கனவுசெல்கிறது. கனவையும் கடந்ததே துயில். மனச்சான்று மனத்தைக் கடந்தது. இவற்றை நனவுமனம், நனவடிமனம், நனவிலி மனம் எனவும் வழங்கலாம். மன எல்லை தாண்டிய நனவிலி மனமே சித்து எனப்படும்,

இம்மூன்றையும் தொட்டு நிற்பதே மனச்சான்று. இது கடந்த மனம்; கடவுள் எனவும் குறிக்கப்படலாம். 'மலர் மிசை ஏகினான் மாணடிசேர்ந்தார் நிலமிசை நீடுவாழ்வார்' 'கள்ளப் பெருமக்கள் காண்பர் கொலோ' என்று உள்ளத் தின் உள்ளே ஒளிந்திருக்கும் "உள்ளம் கவர் கள்வன்" கடவுள்.

முன் குறித்த படத்தைப் பாருங்கள். துயிலுளம் என்ற இருள் பகுதியிலிருந்து கனவுளம் என்ற மங்கிய ஒளிப்பகுதி தோன்றுகிறது; பின்னர் நனவுள்ளமும் மனச்சான்றும் உருவாகின்றன. இவை எல்லாம் ஒன்றுபட்டுயரும் நிலையே வீடுபேறு தரும்; ஒளியுடம்பு அருளும் பெருநிலையாம்.

பருவுடம்பு, நுண்ணுடம்பு, அறிவுடம்பு, ஒளியுடம்பு என மேற்குறித்த உள வடிவத்தைப் பகுத்து உணரவும் வழியுண்டு.

இந் நான்கும் ஒன்றுபட்டு உயர வழி காட்டுவதே நம் வடலூர் ஆண்டவர், திருமூலர், மாணிக்கவாசகர், அப்பர் முதலிய சான்றோர் பெருநெறியாகும்; ஒளி நெறியாகும்.

நாலுபேரும் சொல்கிறபடி, ஒன்றி உணர்த்துகிற படியே நாம் நடக்க நேரும். பருவுடம்பு நுண்ணுடம்பின் வழி நிற்கிறது; அறிவுடம்பு ஒளியுடம்பின் வழி நிற்கின்றது; ஒளி உடம்பே இன்ப உடம்பு என வழங்கப்படுகின்றது. இத்துறையில் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பது முழு உண்மை.

மலரில் மணம் அமைந்திருக்கிறது. உடம்புள் கடவுள் அமைந்துள்ளார். இதை நன்கு பகுத்துணர்வதே ஒளி நெறி; உளநூல் தரும் ஒளி நெறி; வள்ளல் வாழ்ந்து காட்டிய ஒளி நெறி;

" இருளிலிருந்து ஒளி நெறிக் கேற்றுக!
உருக வாழ்த்து பெருநெறிக் கேற்றுக!"

என்பதே உபநிடதங்களின் வழிபாடாகும்.

பிராயர், சார்கோ, பிரோபக்கு என்ற மூவரும் அடி மனம் பற்றிய உண்மையை பிராய்டுக்கு உணர்த்தினர். இவர் தொடர்ந்து பல சோதனைகளின் மூலம் அடிமன ஆராய்ச்சி நடத்தினர்; பாலுந்தல் பேராற்றல் வாய்ந்தது என்றார். இது பிரோபக்கு வற்புறுத்திய உண்மைதான். பிராய்டு அடிமனம் (Idl), நடுமனம் (ego), அதித மனங் மனங்களை (super ego) பிரித்து விளக்குகிறார்.

பாலுந்தலுடன் இன உந்தல் உயர்வுந்தல் என இன்னும் இரண்டு உண்டு என முறையே யுஸ்டும் (Jung) அட்லரும் (Adlar) வற்புறுத்தினர். முன்னேறும் மக்களின ஊழணுக்கள் பற்றிய மரபியல் (Genetics) நூல் இதனை வரவேற்கின்றது. உடலும் குரலும் உள்ளமும் முன்னோரை ஒத்தமைகின்றன. காரணம் ஊழணுக்களே (genes) எனலாம்.

விருப்பம் தூய்மையடைகிறது வடிமனத்தில் எனலாம். உந்தல்கள் அடிமனத்திலிருந்து வேலை செய்கின்றன. புலக் காட்சி (percepttion) என்ற புலனுணர்வு அகத்திலிருந்து வேலை செய்கிறது. அகமே வடிமனம். இது புறத்திருந்து வரும் வடிவுகளையும் அடியிலிருந்து வரும் துடிப்புகளையும் உயர்மடைமாற்றம் செய்யத் துணைபுரிகிறது.

இதனை நடுமனம் எனவும் வழங்கலாம். காரணம் இது புற உலகுக்கும் கட்டுப்பட வேண்டும்; மனச்சான்றின் ஆணைக்கும் அடங்க வேண்டும்; அடிமனக் கூத்துக்கும் செவி சாய்க்கவேண்டும்.

அகம் துயிலுள உந்தல்களை நிறைவேற்றலாம்; அல்லது மாற்றியமைக்கலாம்; அல்லது நிறைவேற்றத்தக்க காலம் வரும் எனக் காத்திருக்கலாம்.

அகத்தையும் அடக்கும் சான்று அகம் முரண்படின் மனக்கோளாறு உண்டாகிவிடும்

நனவகம், கனவுகம், துயிலகம், சான்றகம் என்ற நான்கில் எதுவும் அளவுகடந்து ஆட்சி செலுத்திவிடக் கூடாது.

சான்றகம் ஓங்கின் வெறும் கொள்கையாளனாக வழி யுண்டாகிவிடும்.
துயிலகம் ஓங்கின் செயலற்றநிலை தடிக்கும்.

நனவகம் ஓங்கின் இயந்திர மனப்பாங்கு தலையெடுக்கும்.

கனவகம் நடுமனமாக நிலைத்து ஏனையவற்றை ஒரு நடுநிலையில் நிறுத்தின் நிறையுடைமை நிலைபெறும்.

கனவில் இல்லது நனவிலும் இல்லை; சான்றிலும் இல்லை; துயிலிலும் இல்லை; என்ற நிலை ஏற்படவேண்டும்; அப்போதே திட்டமிட்டு முன்னேற வழியுண்டாகும்; இந்நிறையுடைமை நீங்காமை வேண்டும்;

இதற்கேற்ற திருந்திய உண்மை உளநூலையும் (Beal Psychology தனியாள் உளநூலையும் (Individual Psychology) பகுப்புளநூலையும் (Aralytic Psycholgy) முதலில் தொகுத்துணர வேண்டும். இத்திருப்பணியே அடுத்த கட்டுரையில் தொடர்ந்து நடைபெறும். அதில் இயந்திரத் (Stimuli response theory) தூண்டல் துலங்கல் கோட்பாட்டைத் திருத்தி, நோக்கு உள்ளொளிக் கோட்பாடு (Goal-insight theory) விளக்கம்பெறும்; தமிழிலக்கிய இலக்கும் தெளிவாகப்பெறும்.

நாடகத் தமிழ்ச் சொற்கள்

சங்கீத வித்துவான் (வாய்ப்பாட்டு) ப. சுந்தரேசன், குடந்தை.

கூத்து

பழந் தமிழ்க்குடிமரபிற் றோன்றி, இற்றை நாளில் புதுமை பல வந்துவந்து தாக்குகின்ற முறையில் வாழ்ந்து வருகின்ற கி. பி. இருபதாம் நூற்றாண்டினராய நாம் யாவரும், நம் பழந்தமிழின் சீர்மையையும் அறிந்துணர ஆவல் மிக்குடையராகவே திகழ்ந்து வருகின்றோம். நம் தமிழ் மொழியின் மூவகைப் பாகுபாட்டினுள்ளே மூன்றாவதாகத் திகழ்வது நாடகத் தமிழாகும். இத்தமிழ்பற்றிய நூல்கள் பல. குணநூல், கூத்துநூல், சயந்தம், செயிற்றியம், நூல், பரதசேனாபதீயம் பரதம் (தமிழ்ப்பரதம்), மதிவாணர் நாடகத்தமிழ்நூல், முறுவல், போன்ற நாடகத் தமிழ் நூல்கள் இருந்ததும் இறந்தது மான செய்திக்குறிப்புகளும் பலவே.

கூத்து என்ற சொல், பொதுவாக ஆடுவதைக் குறிப்பதாக இருந்து அச்சொல் கூவிக் கூவிக் குதித்துக் குதித்து

ஆடிய செய்கைகளைக் குறித்தே எழுந்தது என விளங்குகிறது.) குதி, குதித்தல், குதித்து எனும் அடியாகப் பிறந்ததே கூத்து என்ற சொல்லாகும். கூத்து எனும் செயல் மகிழ்ச்சியின் அடிப்படையில் தோன்றியதாகும். பெரும்பாலும் அச்செயல், எல்லா உயிர்வகைகளுக்குமே ஒவ்வொரு முறையில் இருந்திருக்கக் கூடும். மக்களினத்திற்கு மட்டும் அச்செயல், களிப்பு மிகுந்த காலத்திற் றோன்றிய பின் தோன்றியவற்றை மீண்டும் நினைந்துணர்ந்து, மிகவும் மகிழ்கின்ற முறையில் வளர்ந்து, அஃதும் உள்ளத்துணர்வாலும் மெய்ப்பாட்டு வகைகளினாலும் பிறப்புற்றப் பிறரால் அறியப் பெற்றும், நினைவுபடுத்தும் வகையில் குறித்து வரன்முறை செய்யப்பெற்ற வகையிலும், நன்கு திருத்தமும் வளர்ச்சியும் பெற்று, நிரம்ப வளர்ந்துகொண்டு வருவதாயிற்று. பின்னர் அழகும் திறமையும் கொண்டு விளங்குவதாயிற்று.

இத்தகைய கூத்துச் செயல் வளர்ச்சி, நந் தமிழகத்தில் வாழ்ந்த பெரு மக்களுக்கு ஏற்பட்ட காலமும் பிறவும் இற்றைக்கு எத்துணையோ ஆயிரம் ஆயிரமாண்டுகளுக்கு முந்தியதாகிவிட்டன. இவ்வாறு மிகவும் காலத்தாலும் கருத்தாலும் முந்திய கூத்து வளர்ச்சி தமிழகத்தில் வாழ்ந்த கூத்தர்களிடத்தும் கூத்தியர்களிடத்தும் இருந்த ஒரு சான்று வருமாறு:

"திருந்திய பொதியில் அருந்திறல் அகத்தியன்
சுந்தர மணிமுடி இந்திரன் மகனோ
மாணு விறலோய் வேணு வாகென
இட்ட சாபம் பட்ட சயந்தன்
சாப விடையெமக் கருள்தவத் தோயென்று
மேவினன் தொழுது மேதக வுரைப்ப
உருந்தவ மாமுனி தமிழ்க்கூத் தொருவர்க்குந்
திருந்திய தலைக்கோல் தானாய்த் திருமென்று
அவனினி துரைப்ப வாகிவந் தனனென்"

இத்தகைய பழம் பாடல்கொண்டு நம்மனோரால் அறியப்படுவது, தமிழ்நாட்டு அகத்தியன் தேவருலகில் இந்திரனவைக்குச் சென்றுவந்தகாலம், அவன் மகனைச் சாபமிட்டகாலம், அச்சாபந்தீர இந்திரன் மகனான சயந்தன் தமிழ் நாட்டுக் கூத்தியர்களுக்கு தலைக்கோலாக இருந்தகாலம் எல்லாம் கடந்த காலமாக கூத்தர் கூத்தியர் தமிழ்நாட்டில் வாழ்ந்து வந்த காலம் விளங்கிற்று என்பதாம். நிற்க,

கூத்து இருவகைப்படும். இவ்விரு வகைகளைக் காலவகையும் வெவ்வேறு பெயரிட்டு வழங்கலாயிற்று. அவ்வழக்கு முறைகளிலும் முதன்முதலமைந்த முறை 1. அகக்கூத்து. 1. புறக்கூத்து எனப்படும். அவை காலம் செல்லச் செல்ல 1. வேத்தியல் 2. பொதுவியல் எனவும் வழங்கியதாக அறியலாம். மீண்டும் கால மாறுதலுக்கேற்ப பெயர் முறை மாறுபடலாயின. இவற்றை அட்டவணைப் படுத்தியறியலாம்.

1 கூத்து	2
அகக் கூத்து	புறக்கூத்து
வேத்தியல்	பொதுவியல்
வசை	புகழ் (வென்றி)
வரி	வரிச்சாந்தி
சாந்தி	விநோதம்
இயல்பு	தேசி
ஆரியம்	தமிழ்

இப்பெயர் வகைகளை அருந்தமிழ் முரையாசிரியரான அடியார்க்கு நல்லார் என்பார், அழகுபெறக்காட்டி, பலவகைய, விரிந்த நூல்களிற் காண்க, எனவும் கூறிவிட்டார். சிலப்பதிகாரத்தில் அவருரை, சாந்தியும் விநோதமுமென எடுத்துக்கொண்டே ஆடல் ஆசிரியனமைதியினை உணர்த்தும் உரைகளின் விளக்கமாகச் செல்கின்றது.

''சாந்திக் கூத்தும் விநோதக் கூத்துமென்றுய்ந்துற வகுத்தனன் அகத்தியன்றனே'' எனும் நூற்பாவும் பிறவுமே அடியார்க்கு நல்லாருக்கு அக்காலத்திற் கிடைத்த அரிய கூத்துத்தமிழ் பற்றிய மேற்கோள்களாகும்.

இவ்வாறு முதன்முதலெழுந்த இருவகைக் கூத்துக்களின் நிலையே பெயர் மாறுபாடு அடைய அடைய அவ்வகைகளுக்கேற்பத் தனித்தனி மாறுபாட்டுடன் கூடி அக்கூத்துக்களின் உறுப்புக்களும் நாளடைவில் வேறுபடலாயின. இக்கட்டுரையில் உறுப்புக்களின் விளக்கத்தை நிறுத்திக்கொண்டு கூத்துக்களின் வகைகளை மட்டுமே பெயரளவில் எழுதுகின்றோம்.

வள்ளிக்கூத்து என்பது, பழங்காலத்திய மக்களில் ஒருசார் வீரர்கள் தன்னுறு தொழிலாக வேனும் மன்னுறு தொழிலாக வேனும் பகைப்புலஞ் சென்று பசுக்களைக் கவர்ந்துவந்து மகிழ்ந்து கொற்றவை வழிபாடு செய்யுமிடத்து அவ்வீரர்களின் மனைவியர்கள் வள்ளிநாயகியின் வேடம் பூண்டு முருக பூசனை புரியும் வேலனோடு வெறியாட்டு ஆடுவதற்குப் பெயர் எனக் கூறப்படுகிறது. குறிஞ்சி நிலத்திலும் வள்ளிக்கூத்து ஆடப்பெறுமாம். அன்றியும், பொதுவாக எவ்விடத்திலும் முருகவேளைக் கருதுகின்ற நாட்கள் எல்லாம் வள்ளிக்கூத்து ஆடுவதே வழக்கு என்பதும், அக்கூத்து பெண்மக்களால் மட்டும் ஆடப்பெறுவது என்பதும் அறிதற்பாலதே. இக்கூத்திற்குரிய தோற்கருவிகளும் அக்கருவிகளை முழக்குவோரும் கருவிமுழக்கும் சொற்கட்டுகளும் பற்பலவாம். அதற்கேற்ப இக்கூத்திற்கு உறுப்புக்களும் பலவாம்.

வசைக்கூத்து: இக்கூத்து பற்றி அடியார்க்கு நல்லார் தரும் குறிப்புக்கள் வருமாறு:- ''**விதூடகக் கூத்து** இதனை **வசைகூத்**தென்பாருமுளர். வசை, வேத்தியல் பொதுவியல் என இரண்டு வகைப்படும், அவை முந்து நூல்களிற்

கண்டு கொள்க" என்பதாம். இக்குறிப்புக்களால் வசைக் கூத்திற்கு விநோதக் கூத்து என்ற பெயரும் அவற்றுள்ளும் இருவகை வேத்தியல் பொதுவியல் எனப் பிரிவு உண்டென் பதும் நன்கு புலனாகும்.

"பல்வகையுருவமும் பழித்துக்காட்ட வல்லனாதல் வசையெனப்படுமே" எனும் நூற்பாவும், ஒரு மன்னனது பகைவன் தோல்வியுற்ற காலத்து, தோல்வியுற்ற மன்ன னைப் பற்றிப் பழித்தும் ஏசியும் வெற்றிகொண்ட மன்ன னுக்கு முன்னால் கூத்தர்களாலும் கூத்தியர்களாலும் ஆடப் பெறுவது வசைக்கூத்தாகும் எனத் தெளிவுபடுத்துகிறது. இக்கூத்தும் தாளத்தின் இயல்புடையனவாம். இவ்வசைக் கூத்தினுள் வென்றிக்கூத்தும் விநோதக்கூத்தும் அடங்கு மாம். அதாவது வென்றிக்கூத்தி னுட்பிரிவாக வசைக் கூத்தும் விநோதக்கூத்தும் திகழும் எனவும் அன்றியும் விநோதக்கூத்தினுள்ளும் வென்றியும், வசையும் அடங்கும் எனவும் கொள்ளலாம். இவை பல்வகைக் கூத்துக்கள் எனவும் கூறப்பட்டன. அக்கருத்தும்,

"பல்வகையென்பது பகருங்காலே, வென்றி வசையே விநோதமாகும்"

என்ற நூற்பாவினாலும் வலியுறுகின்றது.

வென்றிக் கூத்து.

இதனை, "மாற்றா னொடுக்கமும் மன்னன் உயர்ச்சியும்
ஏற்படக் கூறும் வென்றிக் கூத்தே"

எனக் கூறப்பட்டது. அன்றியும், "வென்றி விநோதக் கூத்தென விளம்புவர்" எனவும் கூறப்பட்டமையால் வென்றிக் கூத்தினை, கொடித்தேர் வேந்தரும் குறுநில மன் னரும் முதலாக உடையோர் பகைவர்களை வென்று இருந்த விடத்து அப்பகைவர்களை வசைகூறியும் அவர்களது ஒடுக் கத்தினை பரிகசித்துக் கூறியும், வேடிக்கையாக வெற்றி

கொண்டவர்கள் நகைக்கும்படி விநோதங்காண ஆடப்படு வது எனக்கூறப்பட்டது. ஆகையினலே வென்றிக் கூத்தின் உட்கூறுபாடுகளில் ஒன்று விநோதக் கூத்து என உணரலாம்.

விநோதக் கூத்து.

"விநோதக் கூத்து வேறுபாடுடைத்து" எனவும் அடியார்க்கு நல்லாரால் கூறப்பட்டது. இவ் விநோதக் கூத்தும் தனித்து நின்று சாந்திக் கூத்திற்குப் புறக்கூத் தாயிற்று. இக்கூத்து, குரவை கலிநடம் குடக்கூத்து கரணம் நோக்கு தோற்பாவை எனப் பல்வேறு வகைப்படுமாம். ஆகவே இவ் விநோதக் கூத்தும் வென்றியின் உட்கூறுயிருந்தும் தனித்து நின்று பல வகையாயினவாம். விநோதத்தின் வகைகளுள் ஒன்று குரவைக் கூத்தாகும்.

குரவைக் கூத்து.

குரவை என்பது, காமமும் வென்றியும் பொருளாகக் குரவைச் செய்யுள் பாட்டாக எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனும் கைபிணைந்து ஆடுவதாம்.

"குரவை என்பது கூறுங்காலை
செய்தோர் செய்த காமமும் விறலும்
எய்தக் கூறும் இயல்பிற்றென்ப"

என்ற நூற்பாவினுல் குரவையின் உள்ளீட்டுக் கருத்து தெளிவுபடுத்தப் படுகிறது. இக்குரவைக் கூத்தினது அமைதியினை இளங்கோவடிகள் ஆய்ச்சியர் குரவையினுள் நன்கு கூறியுள்ளார். அவரது கூற்றுப்படி, இக்கூத்து, முல்லைநிலத்தும் பிறவிடத்தும் வாழ்ந்த ஆயர்மக்கள் தங்க ளுக்கு ஏதேனும் உற்பாதம் நிகழ்ந்தால் அக்காலத்தில் ஏறு களைத் தனித்தனியாக நன்கு வளர்த்துவரும் எழுவர் இளங் கோதைமார்கள் கைபிணைந்து அதாவது கற்கடகக்(நண்டுக்

கை) கைகோத்து ஏழு பெண்களும் ஏழு இசைகளின் பெயர் பூண்டுப் பாடியாடுவார்களென அறியலாம்.

அத்தகைய எழுவரும், செங்கிலே மண்டிலத்தாற் கற் கடகக் கை கோத்து ஆடுதற்குரிய தானவுறுப்பை ஆராய் வார்களாம். இதனை, அடியார்க்கு நல்லார்,

"கருதுங் காலைக் கற்கடகம்மே தெரிவிரலை
யங்குலி யிருகையும் பிணையும்"

என்றுகலின், என எடுத்துக்காட்டி "கற்கடக மென்பது தெரிவிரலைக்கை இரண்டும் அங்குலி பிணைந்து வருவதெனக் கொள்க" என விளக்கினர்.

இக்கட்டுரையில் கூத்து என்ற சொல்லின் தன்மையை யும் அதன் பொருளையும் அமைதியையும் அவற்றின் உட் கூற்றினதாய வள்ளிக்கூத்து - வசைக்கூத்து - வென்றிக் கூத்து – விநோதக்கூத்து – குரவைக்கூத்து முதலானவற் றின் கருத்தினையுமட்டும் ஒருவாறு சில குறிப்புக்களால் விளக்கினோம். எல்லாக் கூத்துக்களுமே வேத்தியல் பொதுவியல் என இருவகைப்படுத்தப்பட்டுள்ளன. வேத் தியல் என்பது வேந்தர்களுக்குமுன் ஆடப்பெறுவதாகும். பொதுவியல் என்பது பொதுமக்களுக்கு முன்னதாக ஆடப்பெறுவதாகும். இப்பாகுபாடு தமிழில் தலையாய பண்பாட்டுடன் விளங்கி வந்திருக்கக்கூடும். காலவகையில் கூத்துத்தமிழ் கற்றவரும் அக்கூத்துக்களைத்தாம் ஆடியதும் அவ்வழியினரைக் கற்பித்து ஆட்டுவித்ததுமான தொழில்முறை தமிழ் மன்னர்களால் பெரிதும் போற்றப் பெற்றமையினாலே அத்தொழில்வல்லார் யாவரும் கூத்தாடும் தொழிலாளர்களாயினர், அத்தகையினோர் பொருநர் எனவும், பெண்மக்கள் விறலியர் எனவும் கூறப்படுவராயினர். இத் தகைய கூத்து ஒரு காலத்தில் எல்லாம் வல்ல இறைவனு லும் கால்தூக்கி யாடப்பெற்று அவனும் கூத்தன் எனப் பெயர்பெறுவானாயினன்.

அன்பர் அஞ்சல்

செந்தமிழ் நிர்வாக ஆசிரியர் அவர்களுக்கு.

அன்பார்ந்த ஐயா,

செந்தமிழ் தொகுதி 55—பகுதி 4 (விகாரி ஆடி) யில் பாரதியாரின் வாழ்க்கை வரலாறு பற்றி வரையப்பட்டிருப் பதைப்படித்தேன். அதில் 100ம் பக்கத்தில் 'தமிழர்களைக் காட்டுமிராண்டிகள் என்று தம் தொல்காப்பிய ஆராய்ச்சி நூலில் எழுதிய திரு. மு. இராகவையங்காருக்கு ஏற்ற பதில் தந்தார் நாவலர்' என்று எழுதப்பட்டிருக்கிறது. கட்டுரை எழுதியவரின் பெயர் காணப்படாமையால் இக்கட்டுரை 'செந்தமிழ்' ஆசிரியரின் பொறுப்பில் எழுதப்பட்டி ருப்பதாக எண்ணவேண்டியிருக்கிறது.

ஸ்ரீ மு. இராகவையங்கார் அவர்கள் தம் ஆயுள் முழுதும் தமிழுக்குத் தம்மை அர்ப்பணித்துத் தமிழிற்குச் செய்திருக்கும் அரும் சேவையைத் தாங்கள் அறியாதவர்கள் அல்ல. அவர்களுடைய 80ம் ஆண்டு நிறைவு தினத்தன்று தாங்கள் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக மாளுமதுரை வந்து வாழ்த்து வழங்கியது தங்கட்கு ஞாபகம் இருக்கலாம்.

ஐயங்கார் அவர்களது தொல்காப்பியப் பொருளாதார ஆராய்ச்சி நூல், அதன் அருமை பெருமையை நோக்கித் தமிழ்ச்சங்கத்தாரால் பிரசுரம் செய்யப்பட்டது. (Copy right ஐயங்கார் அவர்களுடையதே) தமிழர்களைக் காட்டு மிராண்டிகள் என்று ஐயங்கார் அவர்கள் உண்மையில் எழுதியிருந்தால், தமிழ்ச்சங்கத்தார் அந்நூலைப் பிரசுரித்

திருப்பார்களா? தமிழர்களைக் காட்டுமிராண்டிகள் என்று ஐயங்கார் அவர்கள் குறிப்பிட்ட இடத்தைத் தாங்களே துருவிக் கண்டுபிடிக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஐயங்கார் அவர்கள் செந்தமிழ்ப் பத்திரிகாசிரியராய் இருந்து அப்பத்திரிகைக்குச் சிறப்புத் தேடித்தந்தவர்; தமிழ்ச்சங்கத்தின் நிர்வாகக் கமிட்டியில் இன்னும் மெம்பராக உள்ளவர். சங்கத்தாரால் பிரசுரிக்கப்பட்ட அவருடைய நூலில், இல்லாத ஒரு விஷயத்தைப் பொய்யாகக் கற்பித்து அதைச் 'செந்தமி'ழிலேயே எழுதி வயது முதிர்ந்த அவருக்குப் பொய்பிரசாரத்தின் மூலம் இழிவு கற்பிக்க யத்தனிப்பது கொடுமை! தாங்கள், செந்தமிழின் மறு பகுதியில் ஐயங்கார் அவர்களின் நற்பெயருக்கு இழைக்கப் பட்டிருக்கும் மாசை அகற்றி உரியதைச் செய்வீர்கள் என்று நம்புகிறேன். தங்கள் விடையை எதிர்பார்க்கும்

தங்கள்,

M. நாராயண ஐயங்கார்

அட்வொகேட்,

மானாமதுரை. (ஸ்ரீ மு. இராகவையங்காரின் குமாரன்)

ஆசிரியர் குறிப்பு:

சென்ற இதழில் வெளிவந்துள்ள நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்தவர் பாராட்டுக்குழுச் செயலாளராவர். ஆகவே மேற்கண்ட கடிதத்தை அவர்களுக்கு அனுப்பி விளக்கம் கோரினோம். அவர்களது விளக்கத்தைக் கீழே கொடுத்துள்ளோம்:

"திருவாளர் மு. இராகவையங்கார் அவர்கள் எழுதிய தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சியில் தமிழர்கள் "காட்டுமிராண்டிகள்" என்ற சொற்களைப்பயன்படுத்த வில்லையென்றாலும் அப்பொருள்கொண்ட சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்கள் என்பதே எங்கள் கருத்தாகும். அது குறித்து அன்று ஆனந்தவிகடன் முதலிய பல வெளியீடுகளில் திருவாளர்கள் பாரதியாருக்கும் இராகவையங்காருக்கும் கட்டுரைப்போர் நடைபெற்றது தமிழகம் அறிந்த உண்மை. அந்நிகழ்ச்சியைத்தான் பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றில் குறிப்பிட்டுள்ளோம்.

தமிழர் மணமுறைகளைப்பற்றித் திரு. இராகவையங்கார் அவர்களின் ஆராய்ச்சி நூலில் 9-ஆம் பக்கத்தில் கீழ்க் கண்டவாறு குறிக்கப்பெற்றுள்ளன: "செய்யுள் வழக்கிலே பழைய தமிழ் மணமுறையை எவ்வளவு சுத்தமுடையதாக முன்னோர் கூறியிருப்பினும், உலகவழக்கானது அச்செய் யுள் வழக்கினும் சிறிது வேறுபட வழங்கியிருத்தல் கூடிய தேயாம்; அஃதாவது தலைவியின் உடம்பாடுபெற்றன்றிப் பெருமலும் அவள் சுற்றமறியாமல் ஒருவன் ஒருத்தியைக் கொண்டுசெல்வது முதலியனவாம், தலைவியின் உடம்பா டின்றி அவளை வலிந்து கொள்வதும் முன்பு நிகழ்ந்துவந்த தென்பதைத் தொல்காப்பியனார் "மகட்பாற்காஞ்சி" என்ற புறத்துறையால் வெளிப்படக்கூறியதோடு, "பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்—ஐயர் யாத்தனர் கரணம் என்ப". என்ற கற்பியற் சூத்திரத்தாலுங் குறிப்பிட்டனர்·உலகியலா கிய பழைய களவு மணத்தில் "பொய்யும் வழுவும் மிகுந்து தோன்றியதனால் அக்குற்றங்கள் நீங்கக் கற்பு முறையை ரிஷிகள் தமிழ் மக்கட்கு விதிக்கலாயினர்" என்பதாம், பழைய உலகியன் மணத்துத்தோன்றிய குற்றங்கள் என்றது ஒருத்தியின் சம்மதம் பெற்று அவளை அன்பாற் கூடி

யொழுகாது நினைத்தவன் நினைத்தபடி ஒருத்தியை வலிந்து கொள்வது முதலியனவாதல் வேண்டும். ஆகவே தமிழ் நாட்டில் காந்தருவம் போன்ற ஒழுங்கான களவுமுறையன்றி, ஒழுங்கற்ற களவு முறையாகிய இராக்கதம் போன்றன வும் முற்காலத்து வழங்கலாயின என்பது உய்த்துணரத் தக்கதாம்.

இவ்வாறு ஒழுங்கற்ற மணமுறைகளை விலக்கி ஒத்த அன்பு பற்றிய காந்தருவத்தையும், அதன் பின்னர்க் கற் பியலையும் ஆரிய மேலோர் தமிழ் நாட்டார்க்கு நன்கு விதித்துப் போந்தனர்."

மேலே குறிப்பிட்ட ஒழுக்கத்தையுடைய மனிதர்களை ஒரே சொல்லால் விளக்கவேண்டுமென்றால் "காட்டுமிராண் டிகள்" என்ற சொல்லைத்தவிர வேறு எதுவும் பொருந்தாது என்பதை உணர்ந்தே அச்சொல்லை நாங்கள் பயன்படுத்தி னோமே ஒழிய முதுபெரும்புலவர். இராகவையங்கார் அவர் களுக்கு வயது முதிர்ந்த நிலையில் ஓர் இழுக்கை உண்டு பண்ண வேண்டுமெனும் கருத்துடனல்ல என்பதைத்தெரி வித்துக்கொள்ள விரும்புகிறோம், இன்று திரு. இராகவை யங்கார் அவர்கள் தம்முடைய பழைய கருத்து பிழையுள் ளது என்று நினைப்பார்களேயாகில் நாங்கள் அப்பழைய கருத்தையே மீண்டும் குறிப்பிட்டதற்காக வருந்துகிறோம்."

பாராட்டுக்குழுச் செயலாளர்

மதுரை



நாவலர் பாரதியார் பாராட்டுவிழா நிகழ்ந்துகொண்டிருக்கும்போது எடுக்கப்பட்ட படம்

நாவலர் பாரதியாரையும் (வலதுபுறமிருப்பவர்) பன்மொழிப்புலவர் மீனாட்சிசுந்தரனாரையும் ஊர்வலமாக அழைத்துவந்தபோது எடுத்த படம்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

I. சங்க வெளியீடு

			ரு.	அ.	ப.
4.	வைத்தியசாரசங்கிரகம்	—	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	—	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம்	—	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	—	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	—	0	6	0
13.	கலைசைச்சிலேடை வெண்பா	—	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	—	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சனம்	—	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (தொகுப்பு)	—	0	4	0

II. செந்தமிழ் வெளியீடு

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	—	0	4	0
2.	களநூல் (5) இனியது நாற்பது (உரை)	—	0	3	0
4.	புலவராற்றுப்படை	—	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	—	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	—	0	8	0
9.	அநுமான விளக்கம்	—	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	—	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	—	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	—	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	—	0	3	0
1[illegible].	திருவாரூருலா	—	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	—	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	—	0	4	0
19.	தேவையுலா	—	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	—	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும்உரையும்	—	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	—	0	8	0
24.	குருமொழி வினாவிடை	—	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை	—	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	—	0	1	0
27.	மதுரைத் திருப்பணிமாலை	—	0	8	0
30.	ஞானாமிர்தக்கட்டளை	—	0	3	0
3[illegible].	மனீஷாபஞ்சகம்	—	0	8	0
36.	உவமானசங்கிரகம்	—	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	—	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	—	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்	—	0	8	0
41.	பொருட்டொகை நிகண்டு	—	0	6	0
42.	அகராதி நிகண்டு	—	0	12	0
43.	மேகவிடு தூது	—	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	—	0	2	0
45.	தண்டலையார் சதகம்	—	0	4	0
46.	இராமோதந்தம்	—	0	3	0
47.	பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100)		1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	—	0	6	0
52.	கூடற்புராணம்	—	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	—	0	6	0
54.	அரும்பொருள் விளக்க நிகண்டு	—	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	—	0	12	0
56.	பாப்பாவினம்	—	0	10	0
57.	மதுரை மும்மணிக்கோவை	—	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	—	0	3	0
59.	கடம்பர் கோயில் உலா	—	0	6	0
60.	சங்கரநயினர்கோயில் அந்தாதி	—	0	6	0
61.	கலைசைக்கோவை	—	0	12	0
62.	பெருந்தொகை	—	5	0	0
63.	சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை	—	0	5	0
64.	சிராமலைக்கோவை	—	0	12	0
65.	மத்யவியாயோகம்	—	0	2	0
67.	அமிர்தரஞ்ஜனி	—	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்	—	0	8	0
70.	திருச்சிறுபுலியூருலா	—	0	12	0
71.	துணைத்தலைவர் நினைவுமலர்	—	0	10	0

1. சங்கத்தினின்று திங்கள் ஒரு முறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4-50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகியிருக்கின்றன இவற்றுள் 1. 2. 3. 6. 7. 8. 9. 10. 14 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட் பகுதிகள் உள்ள பைண்டுசெய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.

2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு 3 காசு வீதம் கழிவு தள்ளிக்கொடுக்கப்படும்.

இவ்விதழ். மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள் திரு. பி. டி. இராசன் (B. A., Bar-at-law. M. L. C.) அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.